# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 130/ந/2017

ஆணை எண். 248/2017

நாள் : 23/10/2017

திரு மு. சிவப்பிரகாசம்,
சென்னை – 600 091.      – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி,
இராணிப்பேட்டை.      – எதிர் மனுதாரர்

சென்னை புழுதி வாக்கம், இரண்டாவது பிரதான சாலை, இந்து காலனி, 23– எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M.சிவப்பிரகாசம் அவர்களின் 09.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2017 அன்று பெறப்பட்டு 130/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை புழுதி வாக்கம், இரண்டாவது பிரதான சாலை, இந்து காலனி, 23– எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M.சிவப்பிரகாசம் என்பவர் தனது தந்தை திரு முனுசாமி அவர்களுக்கு வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டை வட்டம், பிஞ்சி கிராமம், புல எண்.313/3–ல் 6 சென்ட் நிலம் கிரயம் மூலம் பாத்தியப்பட்டதென்றும், தனது தந்தையாரின் மறைவிற்குப் பின்பு தங்களது குடும்ப உறுப்பினர்கள் சென்னைக்கு குடியேறி வசித்து வந்த நிலையில், மேற்படி நிலத்தினை தவறான முறையில் பதிவு செய்து பெயர்மாற்றம் செய்து விட்டனர் எனத் தெரிவித்து, அப்பெயர் மாற்றத்தினை இரத்து செய்யக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட நிலம் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டு பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தனது முறையீட்டு மனுவிலோ அல்லது விசாரணையின்போதோ மனுதாரர் குறிப்பிடவில்லை. முறையீட்டு மனுதாரரிடம் 28.06.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது மேற்குறிப்பிட்ட நிலம் சம்பந்தமான சில பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்களை சமர்ப்பித்தார்.

மேலும், தானும் தனது சகோதரர்களும் சென்னையில் குடியேறியுள்ளதால் மேற்படி நிலம் தங்கள் குடும்பத்தை சாராத ஒருவர் பெயரில் மாற்றம் செய்து நகராட்சிப் பதிவேடுகளில் பதிவாகி உள்ளது என்றும் அதனை இரத்து செய்து வாரிசு சான்றிதழ் அடிப்படையில் தனது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் பெயர்மாற்றம் செய்து தர ஆணையிடுமாறு விசாரணையின்போது கேட்டுக்கொண்டார்.

இராணிப்பேட்டை நகராட்சி ஆணையர் 17.07.2017 அன்று விசாரணைக்கு வருகை தந்து வாக்குமூலம் அளித்தார். மேலும், தனது 13.07.2017 நாளிட்ட கடிதத்தில், இராணிப்பேட்டை நகரம், வார்டு எண். D.பிளாக் எண்.10, பழைய நகரளவை எண்.17/1A1 –ல் பாகம், புதிய நகர புல எண்.17/5–.

நஞ்சை பரப்பளவு 0.0224.0 சதுர மீட்டர் முனுசாமி மகன் நாராயணசாமி என்பவர் பெயரில் நகராட்சி நிலப்பதிவேட்டில் பதிவாகியுள்ளது என்றும் மேற்படி பதிவேட்டில் எந்தப் பெயர் மாற்றமும் செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி மனையில் தற்பொழுது பெருமாள் என்பவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும் வீடு கட்டுவதற்கு முறையான அனுமதி பெறப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளார். மேலும், நகராட்சி அனுமதி இல்லாமல் கட்டடம் கட்டியதற்கு நகராட்சி மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டன. வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டை வட்டம், பிஞ்சு கிராமம் புல எண்.313/3–ல் 1 ஏக்கர் 48 செண்ட் நிலத்தில் 6 செண்ட் நிலத்தினை 03.09.1969 நாளிட்ட ஆவண எண்.1762/68 மூலம் முறையீட்டு மனுதாரரின் தந்தையார் திரு முனுசாமி அவர்கள் திருமதி பட்டம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார். கிரயம் பெற்ற மேற்படி பகுதி நிலம் உட்பிரிவு செய்யப்பட்டு கிரயம் பெற்ற திரு முனுசாமி பெயரில் பட்டா வழங்கப்படவில்லை. உட்பிரிவு செய்யப்படாத மேற்குறிப்பிட்ட புல எண்ணில் உள்ள 6 செண்ட் பகுதி நிலம் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டு பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதற்கான ஆதார ஆவணங்களை மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை. மேலும், நகராட்சி அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட வீடு அமைந்துள்ள 17/5 நகர அளவை எண்ணுள்ள நிலமும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள புல எண்.313/3–ல் 6 செண்ட் பகுதி நிலமும் ஒரே நிலம் என்பதற்காக ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை.

எனவே, மனுதாரரின் நில உரிமை குறித்த முறையீட்டினை இம்முறைமன்ற நடுவ விசாரணை வரம்பிற்குள் உட்படுத்த இயலாது எனத் தெரிவித்து ஆணையிடுகிறது. மேலும், மேற்படி நகராட்சியின் நகர நில அளவை எண்.17/5–ல் நகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்ட வீடு சம்பந்தமாக நகராட்சி விதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை தெரிவிக்குமாறு ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 23–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1) திரு மு. சிவப்பிரகாசம்,
எண்.23, இந்து காலனி, இரண்டாவது பிரதான சாலை,
புழுதி வாக்கம், சென்னை – 600 091.

2) ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி, இராணிப்பேட்டை.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்